முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.
முன்னிலை திருமதி.T.நித்யகலா,B.Com.,BL.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திட்டக்குடி.

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை.
OS.85/2021

ராஜேந்திரன் ....... வாதி

எதிர்

செந்தமிழ்ச்செல்வன் ....... எதிர்வாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 11.10.2022 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.அ.பழனியாண்டி.,BL., அவர்கள் ஆஜராகி வந்த நிலையில், பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.B.தரணிதரன்,B.A.,BL.,MBA.,அவர்கள் ஆஜராகியும், வாதியை அழைத்து ஆஜராகாததால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்புரை

29.11.2017 தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என அறிவித்தும், வழக்குரை சொத்துக்கள் வாதிக்கே பாத்தியமென விளம்புகை செய்தும், பிரதிவாதி வழக்குரை சொத்தில் நுழையாமல் நிரந்தரமாக தடுத்து எதிர்வாதி பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படியும், வழக்கு செலவு வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கு எதிர்வாதிகளால் எதிர்வழக்குரை வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கெழுவினாவிற்காக உள்ள நிலையில் நீதிமன்ற கட்டணம் குறித்து தெளிவுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில் வாதியை அழைத்து ஆஜரில்லை. எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே வாதி வராத தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11ஆம் நாளாகிய இன்று இந்த தீர்ப்புரை என்னால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்/நித்யகலா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.
முன்னிலை திருமதி.T.நித்யகலா.B.Com.,BL.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திட்டக்குடி.

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை.
OS.85/2021

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், பழமலைநாதபுரம் குடிக்காடு கிராமத்தில் வசிக்கும் ஆறுமுகம் மகன் 64 வயதுள்ள ராஜேந்திரன் .... வாதி

/எதிர்/

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், சின்னக்கொசப்பள்ளம் மகாராஜன் மகன் 42 வயதுள்ள செந்தமிழ்ச்செல்வன் ....பிரதிவாதி

29.11.2017 தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என அறிவித்தும், வழக்குரை சொத்துக்கள் வாதிக்கே பாத்தியமென விளம்புகை செய்தும், பிரதிவாதி வழக்குரை சொத்தில் நுழையாமல் நிரந்தரமாக தடுத்து எதிர்வாதி பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படியும், வழக்கு செலவு வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு முன்னிடப்பட்ட நாள் | : | 11.10.2022 |
| வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் | : | 20.11.2021 |
| வழக்கு மூலம் ஏற்பட்ட இடம் | : | பெலாந்துறை கிராமம். |
| வழக்கின் பெறுமானம் | : | வழக்கின் மதிப்பு ரூ.18,265/-எனக்கண்டு அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.548/- நீ.ம.மு.க.ச பிரிவு 25(b)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் *11.10.2022* அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.அ.பழனியாண்டி.,BL., அவர்கள் ஆஜராகி வந்த நிலையில், பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.B.தரணிதரன்,B.A.,BL.,MBA.,அவர்கள் ஆஜராகியும், வாதியை அழைத்து ஆஜராகாததால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்பாணை

இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

செலவுத் தொகைப்பட்டியல்

*(இருதரப்பிலும் செலவுத் தொகைபட்டியல் தாக்கல் இல்லை)*

<u>சொத்துவிபரம்</u>

**<u>A அட்டவணை</u>**

திட்டக்குடி வட்டம், பெலாந்துறை அயன்புஞ்சை சர்வே எண்.*348/2*ல் ஆறுமுகம் நிலத்திற்கும் *(*கி*)* *(*மே*)*, மங்கலம்மாள் நிலத்திற்கும் *(*தெ*)*, சின்னம்மாள் நிலத்திற்கும் *(*வ*)* இதில் *0.22* சென்ட்.

**<u>தற்கால எல்லை 29.11.2017ன் பத்திரப்படி</u>**

திட்டக்குடி வட்டம், பெலாந்துறை அ.பு.ச.எண்.*348/2* ஏல் ராஜேந்திரன் நிலத்திற்கும் *(*வ*)*, ஞானப்பிரகாசம் நிலத்திற்கும் *(*கி*)*,சண்முகசுந்தரம் நிலத்திற்கும் *(*தெ*)*, சோமு கொண்டியார் நிலத்திற்கு *(*மே*)* இதில் *0.14.0* சென்ட். மேலே கண்ட *0.22* சென்டில் *0.14* சென்ட் மட்டும் கிரையம்

**<u>B அட்டவணை</u>**

*29.06.1949* பத்திரப்படி திட்டக்குடி வட்டம், பெலாந்துறை அ.பு.ச.எண்.*348/2* எண்ணில் பாட்டைக்கும் *(*தெ*)*, மங்கலம்மாள் நிலத்திற்கும் *(*மே*)*, சிதம்பரம் நிலத்திற்கும் *(*கி*)* *(*வ*)*

**<u>தற்கால எல்லை 29.11.2017ன் பத்திரப்படி</u>**

திட்டக்குடி வட்டம், பெலாந்துறை அ.பு.ச.எண்.348/2 எண்ணில் சோமு கொண்டியார் நிலத்திற்கும் (வ), துரைசாமி நிலத்திற்கும் (கி), முருகேசன் நிலத்திற்கும் (மே), பாட்டைக்கும் (தெ) இதில் 0.25 சென்ட் ஆக இரண்டும் சேர்த்து 0.39 சென்ட் நிலம்.

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11ஆம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(ஒப்பம்/நித்யகலா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

திட்டக்குடி/

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.

முன்னிலை: திரு.G.தாமரை இளங்கோ, B.Sc., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
திட்டக்குடி.

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ம் நாள் புதன்கிழமை

முவ.எண்.04/2017

வரதராஜன்

.... வாதி

/எதிர்/

செங்கமலை ..... எதிர்வாதி

இவ்வழக்கு 11.03.2020 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்து வாதிக்காக வழக்கிறிஞர் திரு.K.கோடிராமசேது,பி.எஸ்ஸி.,பி.எல்.,அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்....

தீர்ப்புரை

வாதிக்கு பிரதிவாதியால் ரூ.50770/–ம் அதில் அசல் தொகை ரூ.40,000/–ம் பின்வட்டியும் நீதிமன்ற செலவும் கிடைக்கும் படிக்கும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதியை அழைத்து ஆஜரில்லை. எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. ஒரு தலைபட்ச விசாரணைக்காக 28.02.17 முதல் இந்த நாள் வரை நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது. போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும் வழக்கை நடத்த முன்வராததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ஆம் நாள் என்னால் திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/ஜி. தாமரை இளங்கோ
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.(கூ.பொ)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.

முன்னிலை: திரு.G.தாமரை இளங்கோ, B.Sc., M.L.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
திட்டக்குடி.

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11—ம் நாள் புதன்கிழமை

முு.வ.எண்.04/2017

தற்காலம் வேப்பூர் வட்டம், திட்டக்குடி வட்டம்,ரெட்டாக்குறிச்சி அஞ்சல்,
மாங்குளம் கிராமத்தில் வசிக்கும் நடேச உடையார் குமாரர்
67 வயதுள்ள வரதராஜன்

.... வாதி

/எதிர்/

தற்காலம் வேப்பூர் வட்டம், திட்டக்குடி வட்டம்,ரெட்டாக்குறிச்சி அஞ்சல்,
மாங்குளம் கிராமத்தில் வசிக்கும் பச்சமுத்து படையாட்சி குமாரர்
40 வயதுள்ள செங்கமலை ..... எதிர்வாதி

வாதிக்கு பிரதிவாதியால் ரூ.50770/—ம் அதில் அசல் தொகை ரூ.40,000/—ம் பின்வட்டியும் நீதிமன்ற செலவும் கிடைக்கும் படிக்கும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள்:20.01.2017 வழக்கின் மதிப்பு ரூ.50770/— அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டம் பிரிவு 22 ன் படி ரூ3808.75/—நீதிமன்றக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 14.07.2013, 10.06.2016 ஆகிய தேதிகளில் வேப்பூர் வட்டம், மாங்குளம் கிராமத்தில் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு 11.03.2020 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்து வாதிக்காக வழக்கிறிஞர் திரு.K.கோடிராமசேது,பி.எஸ்ஸி.,பி.எல்.,அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவண்ங்களை பரிசீலனை செய்தும் இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆணையிட்டு வழங்கும்....

தீர்ப்பாணை

இவ்வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

<u>செலவுத் தொகைப்பட்டியல் விபரம்</u>

இரு தரப்பில் செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் இல்லை

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/ஜி. தாமரை இளங்கோ
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திட்டக்குடி.(கூ.பொ)**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.
முன்னிலை திருமதி.T.நித்யகலா,B.Com.,BL.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திட்டக்குடி.
2022ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16ஆம் நாள் புதன்கிழமை.
OS.15/2020

சுப்ரமணியன் ....... வாதி

எதிர்

1.மாயக்கண்ணன்
2.கவிதா
3.சடையமூர்த்தி
4.பாரதி

....... எதிர்வாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 16.03.2022 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.P.பெரியார்,MA.,BL., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வாதிக்காக வழக்கறிஞர் தங்க.இராஜீவ்காந்தி.MA.,BL.,அவர்கள் முன்னிலையாகியும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்புரை

வழக்கு சொத்து வாதிக்கே பாத்தியமும் அனுபோகமானது என விளம்புகை செய்தும் அதனை அனுசரித்து வழக்குச் சொத்துக்களில் எதிர்வாதிகள் அவர்தம் ஆட்கள் மற்றும் முகவர்கள் அத்துமீறி பிரவேசிக்கவோ ஆக்கிரமிப்பு செய்யவோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என் நிலைக்கால உறுத்துக்கட்டளை மூலம் தடை செய்ய வேண்டுமாயும், வழக்கு செலவு வாதிக்கு எதிர்வாதிகளால் கிடைக்கும்படியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதியை அழைத்து ஆஜாரில்லை எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே இவ்வழக்கு இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16ஆம் நாளாகிய இன்று இந்த தீர்ப்புரை என்னால் அவையறியப் பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.
முன்னிலை திருமதி.T.நித்யகலா,B.Com.,BL.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திட்டக்குடி.
2022ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16ஆம் நாள் புதன்கிழமை.
OS.15/2020

திட்டக்குடி வட்டம், கழுதூர் கிராமத்தில் வசிக்கும் அங்கமுத்து மகன் சுமார் 65 வயதுள்ள சுப்ரமணியன் ...... வாதி

/எதிர்/

1.திட்டக்குடி வட்டம், கழுதூர் கிராமத்தில் வசிக்கும் வெள்ளக்காரன் மகன் சுமார் 47 வயதுள்ள மாயக்கண்ணன்

2.திட்டக்குடி வட்டம், கழுதூர் கிராமத்தில் வசிக்கும் மாயக்கண்ணன் மனைவி சுமார் 45 வயதுள்ள கவிதா

3.திட்டக்குடி வட்டம், கழுதூர் கிராமத்தில் வசிக்கும் மாயக்கண்ணன் மகன் சுமார் 26 வயதுள்ள சடையமூர்த்தி

4.திட்டக்குடி வட்டம், கழுதூர் கிராமத்தில் வசிக்கும் மாயக்கண்ணன் மகன் சுமார் 24 வயதுள்ள பாரதி

....எதிர்வாதிகள்

வழக்கு சொத்து வாதிக்கே பாத்தியமும் அனுபோகமானது என விளம்புகை செய்தும் அதனை அனுசரித்து வழக்குச் சொத்துக்களில் எதிர்வாதிகள் அவர்தம் ஆட்கள் மற்றும் முகவர்கள் அத்துமீறி பிரவேசிக்கவோ ஆக்கிரமிப்பு செய்யவோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என் நிலைக்கால உறுத்துக்கட்டளை மூலம் தடை செய்ய வேண்டுமாயும், வழக்கு செலவு வாதிக்கு எதிர்வாதிகளால் கிடைக்கும்படியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு முன்னிடப்பட்ட நாள் : 16.03.2022

வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் : 19.03.2020

வழக்கு மூலம் ஏற்பட்ட இடம் : கழுதூர் கிராமம்.

வழக்கின் பெறுமானம் : வழக்கின் மதிப்பு ரூ.34,880/-எனக்கண்டு அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.1046/- நீ.ம.மு.க.ச பிரிவு 25(பி) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 16.03.2022 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.P.பெரியார்,MA.,BL., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வாதிக்காக வழக்கறிஞர் தங்க.இராஜீவ்காந்தி.MA.,BL.,அவர்கள் முன்னிலையாகியும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்பாணை

இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

செலவுத் தொகைப்பட்டியல்

(இருதரப்பிலும் செலவுத் தொகைபட்டியல் தாக்கல் இல்லை)

<u>சொத்து விவரம்</u>

விருத்தாசலம் ரி.டி வேப்பூர் சப்.டி திட்டக்குடி வட்டம், கழுதூர்கிராமம்

| வ.எண் | நத்தம் சர்வே எண் | விஸ்தீரணம் | வழிகாட்டி மதிப்பீடு |
|---|---|---|---|
| 01 | (pattaNo.1051) சர்வே நெ.83/1ல் மேலத்தெருவில் சந்து வீதிக்கும் வடக்கு, காத்தாயி மனைக்கும் தெற்கு, பாக பத்திரத்தில் கண்ட 2வது அயிட்ட மனைக்கும் மேற்கு. அய்யங்கார் நிலத்துக்கும் கிழக்கு. இதில் கீ.மே.லிங்ஸ் இருபுறமும் 33ம் (6.6 மீட்டர்) உள்ள 1000 சதுர லிங்சுக்கு | 00040 சதுர மீட்டர் | 34.880/- |

| | | | |
|---|---|---|---|
| | 436 சதுரடி (40 சதுரமீட்டர்) கொண்ட காலி மனை இது UDR ல் 454/1 ஆக பிரிந்துள்ளது. பட்டா நெ.167ல் | | |
| 2. | மேற்படி சர்வேயில மேற்கண்ட மனைக்கும் கிழக்கு, மாயக்கண்ணன் மனைக்கும் மேற்கு, காத்தாயி மனைக்கும் தெற்கு, சந்து வீதிக்கும் வடக்கு, இதில் கீ.மே லிங்ஸ் இருபுறமும் 29ம் (5.8 மீட்டர் ) தெ.வ.லிங்ஸ் இருபுறமும் 30ம் (6.0 மீட்டர்) உள்ள 875 சதுர லிங்சுக்கு 382 சதுரடி (35 சதுரமீட்டர்) இது UDR ல் 454/2 ஆக பிரிந்துள்ளது. | | 34.880/- |

2022ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16ஆம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.